**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.411 நாள்: 21.08.2026

**வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (21.08.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-199க்குட்பட்ட சோழிங்கநல்லூர் சிக்னல் சந்திப்புப் பகுதி மற்றும் வார்டு-193க்குட்பட்ட துரைப்பாக்கம் பகுதியில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமளவு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, வார்டு-200க்குட்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் 1ஆவது பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பெருமளவு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும், மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், வார்டு-199க்குட்பட்ட பொன்னியம்மன் கோவில் தெருவில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடம் கட்டுமானப் பணி, வார்டு-200க்குட்பட்ட செம்மஞ்சேரி பகுதியில் உள்ள இலவச ஒப்பனை அறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் 66ஆவது குறுக்குத் தெருவில் உள்ள மைய சமையல் கூடம், வார்டு-199க்குட்பட்ட ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள அம்மா உணவகம், வார்டு-194க்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் பகுதியில் மாநகராட்சி விதிகளை மீறிக் கட்டப்பட்டுள்ள கட்டடம் தொடர்பாகவும், வார்டு-197க்குட்பட்ட உத்தண்டி பகுதியில் உள்ள மைய சமையல் கூடம், உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மைய சமையல் கூடம் மற்றும் அம்மா உணவகங்களில் தரமான உணவு தயாரித்து வழங்கிடவும், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், ஒப்பனை அறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**